SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஆகஸ்ட் - 2019

# TNPSC ZERO CURRENT AFFAIRS PRELIMS

**0%** Effort | **100%** Results


www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# ஆகஸ்ட் - 2019

## தமிழ்நாடு

1. **தமிழ்நாடு சுதந்திர தின முதலமைச்சர் விருதுகள் வெற்றியாளர்கள்** :

| | |
|---|---|
| **டாக்டர்.ஏ.பி.ஜே அப்துல்கலாம் விருது** | K. சிவன் - இஸ்ரோ தலைவர் |
| **கல்பனா சாவ்லா விருது** | P.ரம்யா லட்சுமி |
| **வீரதீர செயல்களுக்கான முதலமைச்சரின் சிறப்பு விருது** | P.சண்முகவேலு மற்றும் செந்தாமரை (திருநெல்வேலி மாவட்டம்) |
| **முதலமைச்சரின் நல் ஆளுமை விருது** | பெருநகர சென்னை காவல் ஆணையரகம் - சென்னையில் குற்றங்களை கண்டறிய சிசிடிவி-யுடன் கூடிய Facetager செயலி-யை அறிமுகப்படுத்தியதற்காக விருது வழங்கப்பட்டது. |
| **சிறந்த நகரப் பஞ்சாயத்து** | முதல் பரிசு - தி. கல்லுப்பட்டி (மதுரை)<br>இரண்டாம் பரிசு - நன்னிலம் (திருவாரூர்)<br>மூன்றாம் பரிசு - பவானிசாகர் (ஈரோடு) |
| **சிறந்த மாநகராட்சி** | சேலம் மாநகராட்சி |
| **சிறந்த நகராட்சி** | முதல் பரிசு - தர்மபுரி<br>இரண்டாம் பரிசு - வேதாரண்யம்<br>மூன்றாம் பரிசு - அறந்தாங்கி |

2. 2019 ஆகஸ்ட் 15, அன்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வேலூர் மாவட்டத்தை ***வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர்*** மாவட்டங்களாக பிரித்து அரசாணை வெளியிட்டுள்ளார்.

3. பல்லவன் கிராம வங்கி சிறந்த கிராம வங்கியாக அசோசாமின் ஸ்கோச் விருதைப் ***(ASSOCHAM'S SKOCH AWARD)*** பெற்றது.

4. 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை அனந்தசரஸ் குளத்திலிருந்து அத்திவரதர் சிலை வெளியே எடுக்கப்படுகிறது. "அனந்தசரஸ்" குளத்தின் நிலையை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க ***M.கார்த்திகேயன் மற்றும் M.மகாராஜன்*** என இருநபர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

5. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அரியலூர் அருகே உள்ள வாரணவாசியில் “நிலத்தடி புதைபடிம அருங்காட்சியத்தை” திறந்து வைத்தார்.

6. 2019 ஆகஸ்ட் 19, அன்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ***“முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டம்”*** என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

7. சென்னையில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக ***“தனித்துவமான இளஞ்சிவப்பு நிறத்தில் அம்மா ரோந்து வாகனங்கள்”*** தொடங்கப்பட்டன.

8. நாடு முழுவதும் மனித செயல்பாடுகள் மூலம் சல்பர்டை ஆக்சைடு அதிகமாக உமிழப்படும் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

9. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வண்டலூர் மிருகக்காட்சி சாலையில் புதிதாகப் பிறந்த புலிக்குட்டிகளுக்கு மித்ரன், யுகா, வெண்மதி மற்றும் ரித்விக் எனப் பெயரிட்டார்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## தேசம்

1. **அரசியலமைப்பு விதி 370 மற்றும் 35 (ஏ) ரத்து செய்யப்பட்டது** : 2019 ஆகஸ்ட் 5, அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான விண்ணப்பம்) ஆணை, 2019-னை வெளியிட்டார்.

    a. இந்த ஆணைப்படி, இந்திய அரசியலமைப்பின் விதிகள் தற்போது அம்மாநிலத்திற்கும் பொருந்தும்.

    b. இந்த ஆணை நடைமுறைக்கு வந்தால், அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான விண்ணப்பம்) ஆணை 1954-னை பதிலீடு செய்யும்.

    c. ஒரு தனி மசோதா : ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா 2019- ஆனது ஜம்மு மற்றும் காஷ்மீரை தனி யூனியன் பிரதேசமாகவும் (சட்டமன்றத்துடன்) மற்றும் லடாக்கினை தனி யூனியன் பிரதேசமாகவும் (சட்டமன்றம் இல்லாமல்) மாநிலத்தை இரண்டாகப் பிரிக்க அறிமுகப்படுத்தப்பட்டது.

2. பிரதமர் நரேந்திர மோடி தனது சுத்ந்திர தின உரையில் பாதுகாப்புப் படைத் தலைவரை (CDS) என்ற பதவியை நியமிப்பதாக அறிவித்தார்.

3. பிரதமர் நரேந்திர மோடி வீடுகளுக்கு குழாய் வழியே நீரை கொண்டு செல்வதற்காக **"ஜல் ஜீவன் மிஷன்"** எனும் திட்டத்தை தொடங்குவதாக அறிவித்தார்.

4. பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்ற பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியான ***"மேன் Vs வைல்டு"*** 2019 ஆகஸ்ட் 12, அன்று இரவு 9 மணிக்கு ஒளிபரப்பப்பட்டது. இது உத்தரகாண்ட் மாநிலத்தின் ஜிம் கார்பெட் தேசிய பூங்காவில் படமாக்கப்பட்டுள்ளது.

5. **"தீதி கே போலோ" பிரச்சாரம்** : மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மாநிலத்தில் உள்ள பொது மக்களின் குறைகள் மற்றும் பிற சமூக பிரச்சினைகளை தெரிவிக்க "தீதி கே போலோ" பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.

6. மேற்கு வங்க மாநில அரசு ***"பசுமையை காப்பாற்று, சுத்தமாக இருங்கள்" (Save Green, Stay Clean)*** என்ற பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

7. மத்திய எஃகு மற்றும் பெட்ரோலிய, இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் புத்தாக்க மற்றும் கண்டுபிடிப்பு உணர்வை சமூக நிலையில் ஊக்குவிக்க சமீபத்தில் ***“அடல் சமூக கண்டுபிடிப்பு மையத்தை”*** (ACIC) புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.

8. குடியிருப்பு இணைப்பின் கீழ் 200 யூனிட் வரை நுகரும் மக்களுக்கு இலவச மின்சாரம் என புதுடெல்லி முதல்வர் அறிவித்தார்.

9. போலீஸ் விசாரணையில் டிஜிட்டல் கைரேகை மற்றும் கருவிழி ஸ்கேனிங் முறையை பின்பற்றும் இந்தியாவின் முதல் மாநிலம் மகாராஷ்டிரா.

10. இந்தியாவின் முதல் முப்பரிமாண (3D) ஸ்மார்ட் போக்குவரத்து சமிக்ஞை “இன்டெலைட்ஸ்” (Intelights) பஞ்சாபின் மொஹாலியில் தொடங்கப்பட்டுள்ளது.

11. இராஜஸ்தான் “சிறந்த கல்லூரிகளுக்கான வள உதவி” **(Resource Assistance for Colleges with Excellence - RACE)** என்ற ஒரு புதிய உயர்கல்வி மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் மாவட்ட அளவில் வளங்கள் கிடைப்பதை பகுத்தறிவு செய்து அரசு கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் அசையும் சொத்துக்களை பங்கீடு செய்ய இயலும்.

12. மத்திய ரயில்வே அமைச்சகம், இந்திய இரயில்வேயில் CORAS (ரயில்வே பாதுகாப்பு கமாண்டோ) - என்பதனை அறிமுகப்படுத்தியுள்ளது.

13. மூத்த குடிமக்கள் கூறியது போல் நகரத்தின் வாய்வழி வரலாறுகளை பதிவு செய்ய “வாய்வழி வரலாறு திட்டத்தை” (ORAL History Programme) டெல்லி அறிமுகப்படுத்தியுள்ளது.

14. வாலண்டினா எலாங்பம் என்ற 9 வயது சிறுமி வெட்டப்பட்ட மரங்களைப் பார்த்து அழுத காணொளி வைரலானதைத் தொடர்ந்து அவரை மணிப்பூர் மாநில அரசாங்கம் மாநிலத்தின் பசுமைத் தூதராக நியமித்துள்ளது.

15. மத்திய பிரதேச அரசாங்கம் பணம் கொடுத்தவர்களிடமிருந்து பழங்குடியினர் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது.

16. மத்திய பிரதேச அரசு பழங்குடியின குடும்பங்களில் குழந்தை பிறப்பு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் இறப்பின் போது அக்குடும்பங்களுக்கு உதவி வழங்க **(Chief Minister Madad Yojana) “முதலமைச்சர் மாதத் யோஜனா”** எனும் திட்டத்தை அறிவித்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

17. ஐரோப்பிய நாடுகளில் செவிலியர்களின் கடுமையான பற்றாக்குறையை தீர்க்க நெதர்லாந்திற்கு கேரள அரசு உதவ உள்ளது.

18. அரசு வேலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான (EWS) 10% இடஒதுக்கீட்டை ஜம்மு-காஷ்மீருக்கு நீட்டிக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

19. மத்திய அரசானது **"ஒரு நாடு ஒரு குடும்ப அட்டை" திட்டத்தை** 2019 ஆகஸ்ட் 1 முதல் குஜராத், மகாராஷ்டிரம், தெலுங்கானா மற்றும் ஆந்திரபிரதேசம் என நான்கு மாநிலங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.

20. **மிஷன் சக்தி** : சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கு பழங்குடியின பகுதிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்க மகாராஷ்டிரா அரசு "மிஷன் சக்தி" எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

21. உத்திரப்பிரதேச அரசு சீரான போக்குவரத்திற்கு இடையூராக இருக்கும் வகையில் நடைபெறும் அனைத்து பிரார்த்தனைகளையும், மதக்கூட்டங்களையும் சாலையில் நடைபெறுவதை தடை செய்தது.

22. பீகாரின் முதல் சமூகப் பாதுகாப்புச் சொத்தாக "**கோகபீல்**" அறிவிக்கப்பட்டுள்ளது.

23. பஞ்சாப் மாநிலத்தின் கல்வித்துறை, பள்ளி ஆசிரியர்களுக்கான **பகுப்புக் கொள்கையை (Rationalization Policy)** உருவாக்கியுள்ளது. முறையான மாணவர்-ஆசிரியர் விகிதம் (PTR) மற்றும் மாணவர்களின் சிறந்த நலனுக்கு கிடைக்கக்கூடிய கற்பிக்கும் ஆசிரியர்களின் வலிமையை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

24. **தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் (NPR)** கீழ் இந்திய குடிமக்களின் பயோமெட்ரிக் மற்றும் சந்தததி வரைபட (Family tree) விவரங்களை பதிவு செய்யும் அடுத்த சுற்று செப்டம்பர் 2020-ல் நடத்தப்படும்.

25. ஒரே நேரத்தில் தேர்தல் என்பது மக்களவை, மாநில சட்டமன்றங்கள், பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தலை நடத்துவதைக் குறிக்கின்றன.

26. **இந்திய தரநிலைகள் பணியகம் (Bureau of Indian Standards) (BIS)** பாஷ்மினா தயாரிப்புகளை அடையாளம் காணவும், குறிக்கவும், பெயரிடவும் ஒரு இந்திய தரத்தை வெளியிட்டுள்ளது.

## சர்வதேசம்

1. ரஷ்யாவுடனான மத்திய அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து **(Intermediate - Range Nuclear Forces) - Treaty) (INF)** அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக விலகியுள்ளது.

2. 2019 ஆகஸ்ட் 8, அன்று, ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பு விதி 370 ரத்ததானத்தைத் தொடர்ந்து லாகூர்-அட்டாரி சம்ஜௌதா எக்ஸ்பிரஸ் இரயில் சேவையை பாகிஸ்தான் நிறுத்தியது.

3. பெண்கள் ஆண்களின் அனுமதியின்றி சுதந்திரமாக பயணம் செய்யவும் மற்றும் கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கவும் **சவுதி அரேபியா அரசு** அனுமதி வழங்கியுள்ளது.

4. **உலகின் உயரமான ஏரி** : நேபாளத்தின் மானாங் மாவட்டத்தில் அமைந்துள்ள “கஜின் சாரா ஏரி” உலகின் மிக உயரமான ஏரியாகும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## பொருளாதாரம்

1. ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா (எஸ்பிஐ)-வின் ஷாங்காய் கிளை சீனாவின் தேசிய முன்கூட்டியே செலுத்தும் முறையில் (CNAPS) இணைந்த முதல் இந்திய வங்கியாக மாறியுள்ளது.

2. **சவுதி அரம்கோ, (Saudi Aramco)** ரிலையன்ஸ் தொழில் நிறுவனத்தின் சுத்திரிகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் வணிகங்களில் 20% பங்குகளை 15 பில்லியன் டாலருக்கு வாங்க உள்ளது.

3. மத்திய பட்ஜெட்டில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்த சப்கா விஸ்வாஸ் (மரபுத் தகராறு தீர்வு) திட்டம், 2019 செப்டம்பர் 1, முதல் செயல்பாட்டிற்கு வரும்.

4. மத்திய பட்ஜெட்டில் சமூக நிறுவனங்கள் மற்றும் நிதி திரட்டுவதில் இலாப நோக்கமற்ற நிறுவனங்களை ஆதரிப்பதற்காக இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) ஒழுங்குமுறை வரம்பின் கீழ் ஒரு சமூக பங்குச் சந்தையை (SSE) நிதியமைச்சர் முன்மொழிந்தார்.

## விளையாட்டு

1. ஜப்பானின் நசோமி ஒகுஹாராவை வீழ்த்தி பாட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கணை பி.வி.சிந்து ஆவார்.

2. முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் “கபில் தேவிற்கு” **பாரத் கௌரவ் விருது** வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

3. 4வது தமிழ்நாடு பிரீமியர் லீக்கில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி வென்றது.

4. ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் பெண் மற்றும் இரண்டாவது இந்திய பாராலிம்பியன் தீபா மாலிக் ஆவார்.

5. இந்தோனேஷியா நாட்டின் லாபன் பாஜோவில் நடைபெற்ற ஜனாதிபதி கோப்பையில் மேரிகோம் தங்கம் வென்றார்.

6. **கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்** 2020 கௌஹாத்தியில் நடைபெற உள்ளது.

7. **டி20 உடல் ஊனமுற்றோர் உலக கிரிக்கெட் தொடர்** 2019-ல் இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியா வென்றது.

8. பிரதமர், தேசிய ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு **உறுதியான இந்தியா இயக்கத்தை (Fit India movement)** தொடங்கி வைத்தார்.

## மாநாடு மற்றும் கருத்தரங்குகள்

| மாநாடு / கருத்தரங்குகள் | காரணம் / கருத்துரு / வெளிப்பாடு | இடம் | நாள் |
|---|---|---|---|
| **52-வது ஆசியான் (ASEAN) வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூடுகை** | | பாங்காக், தாய்லாந்து | |
| **22-வது தேசிய மின் ஆளுகை கருத்தரங்கு** | **கருத்துரு** : Digital India : Success to Excellence | ஷில்லாங், மேகாலயா | ஆகஸ்ட் 8-9, 2019 |
| **வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் ஆபத்தான இனங்களின் சர்வதேச வர்த்தகம் மீதான ஒப்பந்தம் குறித்த உறுப்பு நாடுகளின் 18வது** | இந்திய நட்சத்திர ஆமை, மென்மையான ஆற்று நீர்க்கீரி மற்றும் ஆசிய சிறிய நகம் கொண்ட நீர்க்கிரி போன்றவை CITES-ன் பட்டியல் I-ற்கு மேம்படுத்தப்படுவதன் மூலம் வணிகரீதியில் வர்த்தக செய்யப்படுவதை | ஜெனீவா, ஸ்விட்சர்லாந்து | |

| | | | |
|---|---|---|---|
| **கருத்தரங்கு (CITES)** | தடுத்து சர்வதேச பாதுகாப்பில் மிக உயர்ந்த மட்டத்தை அளிக்கிறது. | | |
| **காலநிலை மாற்றம் மீதான அமைச்சகங்களுக்கிடையேயான 28-வது சந்திப்பு** | | சாப்பாலோ, பிரேசில் | |

## திட்டங்கள் / யோஜனாக்கள்

| திட்டங்கள் / யோஜனா | நோக்கம் / செய்திகளில் வெளிவரக் காரணம் | அமைச்சகம் / அமைச்சரவை / மாநிலம் |
|---|---|---|
| **விஹாலி திக்ரி யோஜனா (Vhali Dikri Yojna)** | பெண் குழந்தைகளின் நலனிற்காக | குஜராத் |
| **பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகாபியான் (பிரதமரின் குசும்) திட்டம்** | விவசாயிகளுக்கு நீர் மற்றும் நிதி பாதுகாப்போடு ஆற்றல் பாதுகாப்பை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. | மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) |

## குறியீடுகள்

| குறியீடு | நோக்கம் / வெளியீடு | இந்திய தரவரிசை | முதலிடம் |
|---|---|---|---|
| **உலகளாவிய உள்நாட்டு உற்பத்தி (GDP) தரவரிசை** | உலக வங்கி | 7 | அமெரிக்கா |

## குழுக்கள்

| | |
|---|---|
| **என்.கோபால்சுவாமி குழு** | பல்கலைக்கழக மானியக்குழு (UGC) 20 நிறுவனங்களுக்கு புகழ்பெற்ற நிறுவனம் (IOE) அந்தஸ்தை வழங்க பரிந்துரைத்துள்ளது. |
| **முகுந்தகம் சர்மா குழு** | இந்த ஆண்டு தேசிய விளையாட்டு விருதுகளுக்காக சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களை தேர்வு செய்ய 12 பேர் கொண்ட தேர்வுக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. |

| | |
|---|---|
| **மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் புனரமைக்கப்பட்டுள்ளது. (தலைவர் + 6 மத்திய அமைச்சர் + அனைத்து முதலமைச்சர்)** | புனரமைக்கப்பட்ட கவுன்சிலின் உறுப்பினர்கள்:<br>1. அமித் ஷா,<br>2. நிர்மலா சீதாராமன்<br>3. ராஜ்நாத் சிங்<br>4. நரேந்திர சிங்தோமர்<br>இதர உறுப்பினர்கள் :<br>5. தாவர் சந்த் கெலாட்<br>6. ஹர்தீப் சிங் பூரி |
| **கிரண் ரிஜிஜீ குழு** | ஒலிம்பிக் மற்றும் பிற பல விளையாட்டு நிகழ்வுகளில் இந்திய விளையாட்டு வீரர்களின் செயல்திறன் உகந்ததாக இருப்பதை உறுதி செய்ய |

## *இராணுவப் பயிற்சி*

| பயிற்சியின் பெயர் | யாரிடையே நடைபெற்றது | பயிற்சியின் வகை |
|---|---|---|
| **14-வது கொங்கண் - 19** | இந்திய கடற்படை மற்றும் பிரிட்டனின் ராயல் கடற்படை | இருதரப்பு பயிற்சி |

## *பாதுகாப்பு மற்றும் விண்வெளி*

| பாதுகாப்பு & விண்வெளி | நோக்கம் | நாடு / மாநிலம் / நிறுவனம் |
|---|---|---|
| **விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு கட்டுப்பாட்டு மையம் - பெங்களூர்** | கட்டுப்பாட்டு மையத்தின் நோக்கம் விண்வெளி குப்பைகளிலிருந்து அதிக மதிப்புள்ள விண்வெளி சொத்துக்களை கண்காணித்து பாதுகாப்பதாகும். | இஸ்ரோ |
| **ஹோப் புரோப்** | ஜூலை 2020-ல் செவ்வாய்க்கு அனுப்பப்பட உள்ள அரபு நாட்டின் முதல் விண்கலன் | ஐக்கிய அரபு அமீரகம் (UAE) |
| **3 புதிய துல்லியத்தன்மை கொண்ட வழிகாட்டு ஏவுகணைகள்** | யாசின், பாலாபன், கயெம் | ஈரான் |
| **ஜிசாட் - 7 ஆர்** | கடற்படை தனது 2-வது பிரத்யேக தகவல் தொடர்பு மற்றும் கண்காணிப்பு செயற்கைக் கோளை 2022-க்குள் பெறும் | இஸ்ரோ |

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

| இனம் / புதிய கண்டுபிடிப்பு | வகை / நோக்கம் | இடம் |
|---|---|---|
| ஹார்மோனி ஓஎஸ் அல்லது ஹாங்மெங் | சீனமொழியில் ஹார்மோனி ஓஎஸ் அல்லது ஷாங்மெங் எனப்படும் தனது சொந்த இயங்கு தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. | ஹீவாவே |
| | மெக்ஸிகோவை சேர்ந்த ஆராய்ச்சியாளர் கற்றாழை இலைகளை நச்சுத் தன்மையற்ற மற்றும் உயிர்வழி சிதையும் பொருளாக மாற்றுவதற்கான ஒரு புதிய முறையை கண்டறிந்துள்ளார். | மெக்ஸிகோ |
| பெடோர் | சர்வதேச விண்வெணி நிலையத்திற்கு மனிதனைப் போன்ற ஒரு இயந்திர மனிதனைக் கொண்ட ஒரு ஆளில்லா விண்வெளிக்கலனை ஏவியுள்ளது. | இரஷ்யா |

## விருதுகள்

| விருதுகள் / பரிசுகள் | நபர் / நிறுவனம் |
|---|---|
| ரமோன் மகசேசே விருது 2019 | ரவீஷ் குமார் |
| மிஸ் இங்கிலாந்து 2019 | பாஷா முகர்ஜி |
| ஐ.பி.சி.2019 சிறப்பிற்கான சர்வதேச மரியாதை விருது | ஆண்டி செர்கிஸ் |
| கினியா குடியரசின் மிக உயர்ந்த விருது “நேஷனல் ஆர்டர் ஆப் மெரிட்” | ராம்நாத் கோவிந்த் |
| கார்த்திக் போஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது | அருண் லால் |
| சிறந்த கண்டுபிடிப்பு மற்றும் முன்முயற்சி தலைமை விருது | இராஜஸ்தான் |
| வீர் சக்ரா | விங் கமாண்டர் அபிநந்தன் வர்தமான் |
| தேசிய சிறந்த திட்ட விருது | சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் (CMRL) |
| ஸ்கோச் (SKOCH) ஆளுமை தங்க விருது | தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM) |

## புவிசார் குறியீடு (GI Tag)

| வ.எண். | புவிசார் குறியீடு | மாநிலம் |
|---|---|---|
| 1 | பழனி பஞ்சாமிர்தம் | தமிழ்நாடு |

## நியமனங்கள் மற்றும் செய்திகளில் வந்த நபர்கள்

| நபர்கள் | பொறுப்பு / பதவி |
|---|---|
| ராகேஷ் அஸ்தானா | போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகத்தின் இயக்குநர் ஜெனரல் |
| அக்ஷய் குமார் | உலகில் 4-வது அதிக சம்பளம் வாங்கும் நடிகர் |

## செய்திகளில் வந்த பெண்கள்

| | |
|---|---|
| **சுஷ்மா ஸ்வராஜ், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர்** | ஆகஸ்ட் 6, 2019-ல் இயற்கை எய்தினார் |
| **பி.வி.சிந்து** | ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையால் உலகின் அதிக சம்பளம் வாங்கும் பெண் விளையாட்டு வீரர்களில் இந்தியாவிலிருந்து இடம் பெற்ற ஒரே விளையாட்டு வீராங்கனை |
| **சந்திரிமா ஷாஹா** | இந்திய தேசிய அறிவியல் அகாடமியின் முதல் பெண் தலைவர் |
| **பி.டி.உஷா** | ஆசிய தடகள சங்கத்தின் (AAA) தடகள ஆணையத்தின் ஆறு உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். |
| **செரீனா வில்லியம்ஸ்** | சிறந்த ஊதியம் பெறும் பெண் விளையாட்டு வீரர்களின் ஃபோர்ப்ஸ் ஆண்டு பட்டியலில் செரீனா வில்லியம்ஸ் முதலிடம் பிடித்தார். |

## புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

| புத்தகம் | எழுத்தாளர் |
|---|---|
| **Tools and Weapons : The Promise and the Peril of the Digital Age** | பிராட் ஸ்மித் |
| **Listening, Learning & Leading** | வெங்கய்யா நாயுடு |
| **Indo Pak Relations : Beyond Pulwama and Balakot** | டாக்டர்.யு.வி.சிங் |
| **Kashmir's Untold Story : Declassified** | இக்பால் சந்த் மல்ஹோத்ரா மற்றும் மரூஃப் ராஜா |
| **Resurgent India** | பிமல் ஜலான் |
| **Chandra Sekhar - The Last Icon of Ideological Politics** | ஸ்ரீ ஹரிவன்ஷ் & ஸ்ரீ ரவி தத் பாஜ்பாய் |

## முக்கிய தினங்கள்

| நாள் | நிகழ்வுகள் | கருத்துரு / முக்கியத்துவம் |
|---|---|---|
| **ஆகஸ்ட் 1** | தேசிய கைத்தறி தினம் | நாட்டில் கைத்தறி நெசவு தொழிலை முன்னிலைப்படுத்தி கைத்தறி நெசவாளர்களை கௌரவிக்கிறது. |
| **ஆகஸ்ட் 9** | உலக பழங்குடியினர் தினம் / பன்னாட்டு உலக பழங்குடி மக்கள் தினம் | **THEME:** "Indigenous Languages" |
| **ஆகஸ்ட் 10** | உலக உயிரி எரிபொருள் தினம் | THEME : "Production of Biodiesel from used cooking Oil" |
| **ஆகஸ்ட் 12** | சர்வதேச இளைஞர் தினம் | **THEME:** "Transforming Education" |
| **ஆகஸ்ட் 13** | உலக உடல் உறுப்பு கொடை தினம் | |
| **ஆகஸ்ட் 15** | உலக சமஸ்கிருத தினம் | பண்டைய சமஸ்கிருத மொழியை ஊக்குவித்தல் மற்றும் புதுப்பித்தல் |
| **ஆகஸ்ட் 19** | உலக மனித நேய தினம் | **THEME:** "Women Humanitarians" |
| **ஆகஸ்ட் 20** | உலக கொசுக்கள் தினம் | |

| | | |
|---|---|---|
| **ஆகஸ்ட் 29** | தேசிய விளையாட்டு தினம் | |

- ஆகஸ்ட் 1 - ஆகஸ்ட் 7, 2019 ஒவ்வொரு ஆண்டும் உலக தாய்ப்பால் வாரம் கடைபிடிக்கப்படுகிறது.
- கருத்துரு : "Empower Parents, Enable Breast feeding"

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS